மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10—35

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் சட்டமன்றக் கட்சித் தலைவர் அவர்கள் காரைக்குடி நகராட்சியை மாநகராட்சியாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். ஆவடி, ஓசூர், கரூர் போன்ற பல நகராட்சிகள் மக்கள்தொகை அதிகம் இருக்கக்கூடிய பகுதிகளாக இருப்பதால், இதற்கு முன்னரே அவை மாநகராட்சிகளாகத் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையில் காங்கிரஸ் சட்டமன்றக் கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன கோரிக்கை விதிமுறைகளுக்குட்பட்டிருப்பின், மக்கள்தொகை, வருவாய் போன்றவற்றைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால், பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 45, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

45—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

***8765—திரு. இரா. குமரகுரு:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உளுந்தூர்பேட்டை தொகுதி, உளுந்தூர்பேட்டையில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை தொகுதி, உளுந்தூர்பேட்டையில் அரசு பலவகை தொழில்நுட்பக்

கல்லூரி துவக்குவது குறித்து கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.*

திரு. இரா. குமரகுரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்ற தாரக மந்திரத்தோடு பொற்கால ஆட்சி செய்து, நம்மையெல்லாம் மீளாத் துயரத்தில் ஆழ்த்திவிட்டு வங்கக் கடலோரம் சந்தனப் பேழையில் உறங்கிக் கொண்டிருக்கும் எங்கள் குலதெய்வம், முன்னாள் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்குகிறேன். கழக பொதுச் செயலாளர் மதிப்பிற்குரிய சின்னம்மா அவர்களையும், ஆர்.கே. நகர் வெற்றி நாயகன், கழக துணைப் பொதுச் செயலாளர் அருமை அண்ணன் திரு. டி.டி.வி. தினகரன் அவர்களையும் வணங்குகிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் சிலர் எழுந்து நின்று ஆட்சேபம் தெரிவித்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள்.*

திரு. இரா. குமரகுரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உளுந்தூர்பேட்டை தொகுதி, விழுப்புரம் மாவட்டத்தில் இருக்கக்கூடிய பெரிய தொகுதியாகும். அது 120 ஊராட்சிகள் மற்றும் ஒரு பேரூராட்சியை உள்ளடக்கிய பெரிய தொகுதியாக இருக்கிறது. கல்வியில் பின்தங்கிய தொகுதியாக உளுந்தூர்பேட்டை தொகுதி இருக்கிறது. உயர் கல்வியில் தமிழ்நாட்டை இந்தியாவிலேயே முதன்மையான மாநிலமாக்கிய பெருமை மாண்புமிகு அம்மா அவர்களுக்கு உண்டு. ஆகவே, உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், எங்கள் தொகுதியின் கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் எடுத்துச் செல்ல வேண்டும்.*

ஏற்கெனவே, அரகண்டநல்லூரில் ஒரு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியும், சங்கராபுரத்தில் ஒரு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியும் இருக்கின்றன. அவை கிட்டத்தட்ட 65 கிலோ மீட்டர்

தொலைவில் இருக்கின்ற காரணத்தினால், உளுந்தூர்பேட்டையை மையமாக வைத்து, பலவகை தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றை நிறுவினால், அங்கே இருக்கின்ற ஏழை மாணவர்கள் உயர் கல்வி பெற்று, அவர்களின் பொருளாதாரம் முன்னேற்றமடைய ஏதுவாக இருக்கும். ஆகவே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, அங்கே ஒரு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, உளுந்தூர்பேட்டை தொகுதி அமைந்துள்ள விழுப்புரம் மாவட்டத்தில், ஏற்கெனவே இரண்டு அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள், 8 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் என மொத்தம் 10 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன.

2012–2013 ஆம் ஆண்டில் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில், விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் வட்டம், காட்டுவனஞ்சூர் கிராமத்தில் புதிதாக ஓர் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி தொடங்கப்பட்டு, அதற்குப் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு, 12–6–2015 அன்று மாண்புமிகு அம்மா அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு, தற்போது அந்தக் கல்லூரியானது சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. மேற்கூறிய கல்லூரி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, உளுந்தூர்பேட்டையிலிருந்து 56 கி.மீ. தொலைவில் உள்ளது.

அதேபோல, விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் தாலுகா, அரகண்டநல்லூரில் ஓர் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி இயங்கி வருகிறது. அந்தக் கல்லூரி உளுந்தூர்பேட்டையிலிருந்து 34 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள இரண்டு அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளிலும், 2015–2016 ஆம் கல்வியாண்டில் மொத்தம் 600 மாணவ, மாணவிகள் பயிலும் வகையில் சேர்க்கை இடங்கள் ஒப்பளிக்கப்பட்டிருந்தன. இதில், 540 சேர்க்கை இடங்கள் மட்டுமே பூர்த்தியாகி இருந்தன. அதேபோல, 2016–2017 ஆம் கல்வியாண்டில், மொத்தம்

600 மாணாக்கர்கள் பயிலும் வகையில் சேர்க்கை இடங்கள் ஒப்பளிக்கப்பட்டிருந்தன. இதில் 548 இடங்கள் மட்டுமே பூர்த்தி அடைந்துள்ளன.

ஆக, அந்த இரண்டு ஆண்டுகளிலும் மாணவர்கள் சேர்க்கையானது அங்கே குறைவாகவே இருக்கின்ற நிலையில், விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள 8 சுய நிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பார்க்கின்றபோது, ஒப்பளிக்கப்பட்ட 3,720 மாணவர்களுக்கான சேர்க்கை இடங்களில் 1,241 மாணவர்கள் சேர்க்கை இடங்கள் பூர்த்தியாகவில்லை. அதேபோல, 2016–2017 ஆம் ஆண்டில் பார்க்கின்றபொழுது, 1,410 மாணவர்கள் சேர்க்கை இடங்கள் பூர்த்தியாகவில்லை. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்தப் பகுதி மாவட்டத்தின் பின்தங்கிய பகுதியாக இருப்பதாலும், ஏழை, எளிய மாணவர்கள் சேர்ந்து படிக்க ஏதுவாகவும், அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி தொடங்க வேண்டுமென்று கோரிக்கை வைத்துள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளவாறு உளுந்தூர்பேட்டையில் ஒரு புதிய அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி தொடங்குவதற்கு, தேவைக்கேற்ப ஆராய்ந்து, மாண்புமிகு அம்மா அவர்கள் வழி தொடரும் இந்த அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.*

திரு. இரா. குமரகுரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிக்கப்படும் என்று சொல்லியிருக்கின்றார்கள். கட்டாயம் பரிசீலனை செய்து, உளுந்தூர்பேட்டை தொகுதியில் இருக்கின்ற மாணவர்களுடைய எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு அங்கே பலவகை தொழில் நுட்பக் கல்லூரி தொடங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், உளுந்தூர்பேட்டையை மையமாக வைத்து அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்றையும் அங்கே உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்று மிக்க பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், விழுப்புரம் மாவட்டத்திலேயே உளுந்தூர்பேட்டை தொகுதிதான் மிகப் பெரிய தொகுதி. விவசாயக் குடும்பங்களைச் சார்ந்தவர்கள் வாழும் தொகுதி. ஆகவே,*

இதில் தனிக் கவனம் செலுத்தி, உளுந்தூர்பேட்டையை மையமாக வைத்து இரண்டு கல்லூரிகளையும் அங்கே துவங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே மீண்டும் ஒரு முறை கோரிக்கை வைத்து, அவற்றை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொண்டு, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையான பலவகை தொழில்நுட்பக் கல்லூரி குறித்து அரசு பரிசீலிக்கும் என்று சொல்லியபிறகு, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தேவை என்று உறுப்பினர் இப்போது கோடிட்டுக் காட்டியிருக்கிறார். மாண்புமிகு அம்மா அவர்களுடைய கடந்த கால ஆட்சியிலே, தமிழகத்தில் புதியதாக 67 கல்லூரிகளைத் தொடங்கி, மாணாக்கர்களுடைய சேர்க்கையிலே, இந்திய அளவிலே தமிழகம் முதன்மை இடம் பெறுகின்ற வகையிலே, மாண்புமிகு அம்மாவினுடைய அரசானது செயல்பட்ட காலகட்டத்தில், பல்கலைக்கழகத்தினுடைய உறுப்புக் கல்லூரி ஒன்று விழுப்புரம் மாவட்டத்தில் தொடங்கப்பட்டது. அரசு உதவிபெறும் கல்லூரி ஒன்று இருக்கிறது; அதேபோல அரசுக் கல்லூரிகள் இரண்டு இருக்கின்றன; சுயநிதிக் கல்லூரிகள் 25 இருக்கின்றன. ஆக மொத்தம் 30 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் அந்த மாவட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. கூடுதலாக அங்கே மாணாக்கர்கள் சேருகின்ற நிலை இருப்பின், அரசானது மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை பரிசீலனை செய்யும். மாண்புமிகு அம்மாவினுடைய அரசானது உயர் கல்வி படிக்கின்ற மாணவர்களுடைய எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்காகவும், அவர்களுடைய வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காகவும் பல்வேறு வகைகளிலே இன்றைக்குப் பணியாற்றிக் கொண்டிருக்கிறது. அந்த வகையில் உறுப்பினரின் கோரிக்கையை அரசு பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*